**O.S. No.  308  /2019**

**Date:06.02 .2026**

**பி.வா.சா.1  அய்யாத்துரை**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தாத்தா பெயர் குத்தாலிங்க நாடார்.  தங்கசாமி நாடார், சின்னச்சாமி நாடார்,மாரிமுத்து நாடார் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.  சின்னச்சாமி நாடார் எனது தந்தை ஆவார்.  எனது தந்தைக்கு நான் மட்டும் தான் வாரிசு.  எனக்கு தற்போது 76 வயது. என்னுடைய பிறந்த தேதி 1950 என்றால் சரிதான்.  எனது தந்தை சின்னச்சாமி நாடார் , பெரியப்பா தங்கசாமி நாடார், மாரிமுத்து நாடார் ஆகியோர்கள் சேர்ந்து 1955 ல் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.  மேற்படி பாகம் செய்யும் போது எனக்கு 6 வயது என்றால் சரிதான்.  பாகத்திற்கு பின்னால் நானும், எனது வாரிசுகளும்  எனது தகப்பனார் சின்னச்சாமி நாடாரும் சேர்ந்து கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.  எனது தந்தை 2018 ம் ஆண்டு இறக்கும் வரை நாங்கள் கூட்டாக தான் அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான்.  எனது அம்மா சீனியம்மாளும், நானும், வாதிகளும் , 2 ம் பிரதிவாதிகளும் எனது தகப்பனார் காலமானதுக்கு பின்னால் சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான்.  தாவா சொத்தில் எனது தகப்பனாருக்கு தனிப்பட் உரிமைகள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். எனது தகப்பனார் தாவா  சொத்தைப் பொறுத்து தனிப்பட்ட ஆவணங்கள் எதுவும் பிறப்பித்திருந்தால் அது செல்லாது என்றால் சரிதான்.  வாதிகள் கேட்கும் பாகம் கொடுக்க எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

Sd/- P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.